# பிரதமர் மோடியை சந்திக்க மு.க.ஸ்டாலின் கடிதம்




# டெல்லியில் முகாமிடும் எடப்பாடி, எஸ்.பி.வேலுமணி

# டாஸ்மாக் முறைகேடு வழக்கு நீதிபதிகள் விலகல்


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 25-3-2025 திங்கள்கிழமை • பக்கம் 8 • ரூ.600 காசுகள்





# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் பங்குனி 11 | MAALAI EXPRESS | ஹிஜிரி 1446 ரமலான் 24

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com

மாநிலம் பயனுற!

/maalaiexpressnews

● புதுச்சேரி ● செவ்வாய்க்கிழமை, மார்ச் 25, 2025 ● வெளியூர்: 26-3-2025, புதன்கிழமை

RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 249 ● 8 பக்கம் ● ரூ.6


## நாம் எந்த மொழிக்கும் எதிரானவர் அல்ல

# திராவிட ஆட்சியில் தமிழ் மொழி காப்பதே இரு கண்கள்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, மார்ச் 25-

தமிழக சட்டசபையில் மும்மொழிக் கொள்கை திணிப்பை எதிர்க்கும் கவன ஈர்ப்பு தீர்மானம் மீதான விவாதத்திற்கு பதிலளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது: இருமொழிக்கொள்கை விவகாரத்தில் பா.ஜ.க.வை தவிர்த்து அனைத்து கட்சிகளும் தங்களது உணர்வை வெளிப்படுத்தின. தமிழும், ஆங்கிலமும்தான் தமிழ்நாட்டினுடைய இரு மொழிக் கொள்கை. அதில் எந்த மாற்றமும் இல்லை. தமிழகத்துக்கு உரிய நிதியை தராவிட்டாலும் இன மானத்தை அடகு வைக்கும் கொத்தடிமைகள் நாங்கள் அல்ல. இது பண பிரச்னை அல்ல இன பிரச்னை. இந்தியை ஏற்காவிட்டால் பணம் தர மாட்டோம் என்று மிரட்டினாலும்.



பணமே வேண்டாம் என தாய் மொழியை காப்போம் என உறுதியாக உள்ளோம். இந்தி மொழி யால் தான் பணம் வரும் என்று கூறினால் அந்த பணமே வேண்டாம் என தீர்மானிப்போம். திராவிட ஆட்சியில் தமிழ் மொழி காப்பதே இரு கண்கள். யார் எந்த மொழியை கற்கவும் நாம் தடையாக இருந்ததில்லை. எந்த மொழிக்கும் எதிரானவர் அல்ல நாம். இன்னொரு மொழியை திணிக்க அனுமதித்தால், அது நம் மொழியை மென்று தின்றுவிடும் என்பதை நாம் அறிவோம். இந்தி மொழி திணிப்பு மூலம் ஒரு இனத்தை ஆதிக்கம் செய்ய நினைக்கின்றனர். மாநிலங்களை தங்கள் கொத்தடிமைகளாக நினைப்பதாலேயே மொழியை திணிக்கிறது. மாநில உரிமையை நிலைநாட்டுவதற்கு தமிழ் மொழி காப்பதற்கான அறிவிப்பை விரைவில் வெளியிடுவேன். மாநில சுயாட்சியை உறுதி செய்து மாநில உரிமையை நிலைநாட்டினால் தான் தமிழ் மொழியை காக்க முடியும் என்றார்.



# திமுக சார்பில் இப்தார் நோன்பு திறப்பு



**புதுச்சேரி, மார்ச் 25-**

புதுச்சேரி மாநில திமுக சார்பில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா தலைமையில் நடைபெற்ற இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் இந்தியா கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்றனர்.

புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில், ஆண்டுதோறும் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடத்துவது வழக்கம். அதன்படி, நேற்று மாலை வில்லியனூர் தொகுதிக்கு உட்பட்ட சுல்தான் பேட்டை முகம்மதியா மஹாலில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமான சிவா தலைமை தாங்கினார். சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில அமைப்பாளர் முகம்மது ஹாலித் வரவேற்றார். சுல்தான்பேட்டை அல்மதினா பள்ளிவாசல் இமாம் முகம்மது மூசா மண்பயி, ஜெய்னுதீன் பாகவி ஆகியோர் சிறப்பு பிரார்த்தனை செய்ய முஹம்மது ரபீக், ராஜ்முகம்மது, அஹது, அஹமதுல்லா, அப்துல் ரசீது, சித்திக், நிஜாம், சுகுது, இஸ்மாயில், சிராஜிதீன், யாசின், இஸ்மத், தைபு, இக்பால், அபுசாலி, ஜாகீர்உசேன், பஜிலுதீன், சையது அலி உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் கலந்து கொண்டு பிரார்த்தனை செய்து நோன்பு திறந்தனர்.

இப்தார் விருந்து நிகழ்ச்சியில் முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அனிபால் கென்னடி, செந்தில்குமார், சம்பத், வைத்தியநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. சரவணன், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் சலீம், விடுதலை சிறுத்தைகள் கட்சி முதன்மை செயலாளர் தேவபொழிலன், தொகுதி செயலாளர் பழநி, மதிமுக கபிரியேல், தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழக மாவட்ட தலைவர் சகாபுதீன், சிபிஜ அந்தோணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சண். குமரவேல், பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், இராமசாமி, செல்வநாதன், தர்மராஜ், தொகுதி செயலாளர்கள் மணிகண்டன், சக்திவேல், வடிவேல், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு. மோகன்தாசு, வர்த்தகர் அணி ரமணன், அயலக அணி அமைப்பாளர் ஷாஜகான், தலைவர் முகம்மது தாஹா, துணைத் தலைவர் பக்ருதீன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் பஜிலுதீன், இலக்கிய அணி துணை அமைப்பாளர் கலிமுல்லா, வர்த்தகர் அணி துணைத் தலைவர் ஹாஜி முகம்மது, தொமுச அங்காளன், சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் ஷேக், அவைத்தலைவர் ஜலால், செயற்குழு உறுப்பினர் அக்பர், தகவல் தொழில்நுட்ப அணி அசாருதின், கிளைச் செயலாளர்கள் முகம்மது சுல்தான், கமால் பாஷா, அன்சாரி, சிராஜிதீன் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி தலைவர்கள், முஹம்மதியா பள்ளிவாசல் தலைவர் மற்றும் நிர்வாகிகள், அனைத்து பள்ளிவாசல்களின் முத்தவல்லிகள், உலமாக்கள், இஸ்லாமிய இயக்க நிர்வாகிகள், ஊர் ஜமாத்தார்கள் கலந்துகொண்டனர்.

# சேலத்தில் உரூஸ் விழா





**சேலம், மார்ச் 25-**

ஹஜ்ரத் காஜா ஷா சையத் ரஹ்மத்துல்லா ஷா சிஷ்தியுல் காதிரி ரஹ், சந்தன குட உரூஸ் விழா திருச்சி மெயின் ரோட்டில் முத்தவல்லி ஸஜ்ஜாதே சையத் அலிமுல்லா உசேனி சிஷ்தியுல், ஹஜ்ரத் காஜா என்கிற கலீமுல்லா உசேனி காதிரி தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு ஜனாப் அல்ஹாஜ் நாசர்கான் என்கிற அமான்பாய் முன்னிலை வகித்தார். இதில் ஜனாப் ஸஜ்ஜாதே, நஷீன், ஹஜ்ரத் காஜா ஷா, சையத் முஹமத் அலி, வலியுல்லா, அல்ஹஸ்ன், வல்ஹிஸ்னி, சிஷ்டியுல், காதிரி, ஹஜ்ரத் காஜா ஷா, சையத் ஜமானுத்தீன், ரஹ்மத்துல்லா, உசேனி, சிஷ்தியுல், காதிரி ஆகியோர் சந்தன உரூஸ் பாத்திஹா நடத்தி வைத்தார்கள்.

# அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி



**தென்காசி, மார்ச் 25-**

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஏ.வி.ஆர்.எம்.வி கலையரங்கில் தென்காசி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சியினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் பார்வையிட்டார். தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணிஸ்ரீகுமார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன்திருமலைக்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது, தென்காசி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை பொதுமக்கள் அறிந்திடும் வகையில் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் உள்ள பொது மக்கள் புகைப்படக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ள நலத்திட்ட உதவிகள், ஆய்வுப்பணிகள் உள்ளிட்ட பல்வேறு புகைப்படத்தினை பார்வையிட்டு தங்களுக்குத் தேவையான நலத்திட்டங்களை அடைந்து பயன்பெற வேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து, தென்காசி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டுள்ள புகைப்படக்கண்காட்சியினை பொதுமக்கள் அனைவரும் பார்வையிட்டார்கள். புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட்டு அரசின் திட்டங்களை பற்றி பொது மக்கள் அறிந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் கவிதா, சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் உமாமகேஸ்வரி, சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் லாலா.சங்கரபாண்டியன், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் பொன்முத்தையா பாண்டியன், மாவட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர் மாரிமுத்து, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) ரா. ராமசுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வணிகத் திருவிழா கூப்பன் குலுக்கல் மூலம்

# ரூ.9 கோடி மதிப்பிலான பரிசுகளுக்கு அதிர்ஷ்டசாலிகள் தேர்வு

## கார், ஸ்கூட்டர் பெற்றவர்கள் யார்?




**புதுச்சேரி, மார்ச் 25-**

புதுவை வணிகத் திருவிழாவில் ரூ.9 கோடி மதிப்பிலான பரிசுகளுக்கு அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் மூலம் தேர்வு செய்யப்பட்டனர். கார், ஸ்கூட்டர்கள் பெற்றவர்கள் யார்? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

புதுச்சேரி அரசு சுற்றுலாத்துறை மற்றும் வணிக விழா சங்கம் சார்பில் வணிகத் திருவிழா கடந்த அக்டோபர் மாதம் 22ந் தேதி தொடங்கியது. இதையொட்டி வாடிக்கையாளர்களுக்கு ரூ.9 கோடி மதிப்புள்ள பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதில் புதுவையில் 230, காரைக்காலில் 159, ஏனாமில் 56, மாகியில் 136 என மொத்தம் 581 நிறுவனங்கள் கலந்து கொண்டன. இந்த வணிக நிறுவனங்களில் வாங்கும் பொருட்களின் மதிப்பிற்கு ஏற்ப வாடிக்கையாளர்களுக்கு பரிசு கூப்பன்கள் வினியோகம் செய்யப்பட்டன.

இந்த திருவிழா கடந்த (பிப்ரவரி) மாதம் 28ந் தேதியுடன் நிறைவு பெற்றது. கார்கள், ஸ்கூட்டர்கள் மற்றும் இன்னும் பல பரிசுப் பொருட்கள் அறிவிக்கப்பட்டு இருந்ததால் வாடிக்கையாளர்கள் போட்டி போட்டு பொருட்கள் வாங்கினர். மொத்தம் 35 லட்சத்து 17 ஆயிரத்து 400 கூப்பன்கள் வினியோகம் செய்யப்பட்டு இருந்தன.

வணிகத் திருவிழா பரிசு குலுக்கல் முடிவுகள் அறிவிக்கப்படுவது எப்போது என்பதை வாடிக்கையாளர்கள் எதிர்பார்த்து வந்தநிலையில் நேற்று காலை கம்பன் கலையரங்கில் பரிசு குலுக்கல் நடந்தது. புதுச்சேரி வணிகர் கூட்டமைப்பு தலைவர் சிவசங்கர் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். சுற்றுலா துறை இயக்குனர் முரளிதரன், உதவி இயக்குனர் சுப்பிரமணியன் மற்றும் அதிகாரிகள், வியாபாரிகள் கலந்துகொண்டனர். பொதுமக்களில் பலர் அதிர்ஷ்டசாலிகளை தேர்வு செய்தனர்.

அதன்படி முதல் பரிசான கார்களை பெறும் 34 பேரும், 2வது பரிசான ஸ்கூட்டர்களுக்காக 68 பேரும், 3வது பரிசு கிரைண்டருக்காக 352 பேரும் 4வது பரிசு மிக்சி பெறும் 352 பேரும் தேர்வு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து 5வது பரிசாக 3,518 பேருக்கு எலக்ட்ரானிக் கெட்டில், 6வது பரிசாக 35,174 பேருக்கு கிச்சன் செட், 7வது பரிசாக 35,174 பேருக்கு பால் குக்கர் பரிசு பெறுவதற்கான எண்கள் தேர்வு செய்யப்பட்டன.

முதல் மற்றும் 2வது பரிசுகள் தவிர 3வது பரிசுக்கு 2407, 4வது பரிசுக்கு 5502, 5வது பரிசுக்கு 910, 6வது பரிசுக்கு 06, 7வது பரிசுக்கு 31 என பரிசு கூப்பன்களில் உள்ள கடைசியாக உள்ள எண்கள் தேர்வு செய்யப்பட்டன. வணிக திருவிழா குலுக்கல் முடிவுகள் தெரியவந்துள்ள நிலையில் வாடிக்கையாளர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கும் தேதி, இடம் பின்னர் அறிவிக்கப்படும் என்று அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இடிந்து விழும் நிலையில் காணப்பட்ட அங்கன்வாடி மையத்தை சீரமைத்த காவல்துறை-பொதுமக்கள் பாராட்டு



**தென்காசி, மார்ச் 25-**

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி தெற்கு தெருவில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் அங்கன்வாடி மையம் பல வருடங்களாக பராமரிக்கப்படாமல் இருந்து வந்தது. இந்த மையத்தில் சுமார் 25க்கும் மேற்பட்ட குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். இந்த அங்கன்வாடி கட்டிடம் அருகில் தினசரி காய்கறி சந்தையும் செயல்பட்டு வரும் நிலையில் இந்த அங்கன்வாடி மையத்தை சுற்றிலும் காய்கறி கடைகள், பழக்கடைகள் ஆக்கிரமித்து செயல்பட்டு வந்தது. இதனால் அப்பகுதி பொதுமக்களுக்கும், குழந்தைகளுக்கும் கடும் சிரமம் ஏற்பட்டு வந்தது.



இந்நிலையில் கடையநல்லூரில் சில மாதங்களுக்கு முன்பு புதிதாக பொறுப்பேற்றுள்ள காவல் ஆய்வாளர் ஆடிவேல் தலைமையிலான காவலர்கள் மற்றும் நகராட்சி நிர்வாகம் ஆகியோரின் தீவிர முயற்சியால் குழந்தைகள் அங்கன்வாடி கட்டிடத்தை சுற்றிலும் ஆக்கிரமித்து வைக்கப்பட்டிருந்த கடைகள் அனைத்தும் பொதுமக்கள் எந்த விதமான சிரமமுமின்றி எளிதாக சென்று வரும் அளவிற்கு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது. அதனை தொடர்ந்து இடிந்து விழும் நிலையில் இருந்த அங்கன்வாடி கட்டிடத்தை காவல் ஆய்வாளர் ஆடிவேல் தலைமையிலான காவலர்களின் தீவிர முயற்சியாலும், அப்பகுதி நன்கொடையாளர்கள் மூலமாகவும் இந்த அங்கன்வாடி கட்டிடத்தை சீரமைக்கப்பட்டது. புதிதாக கட்டி முடிக்கப்பட்ட, அங்கன்வாடி முகப்பு சுவர்களில் மத ஒற்றுமையை வலியுறுத்தும். வகையிலான ஓவியங்கள், திருக்குறள், அப்துல்கலாம் திருவருப்படம், தேசிய கொடி படங்கள் ஆகியவை வரையப்பட்டிருந்தது பொது மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

மேலும் குழந்தைகளுக்கு தேவையான கல்வி மற்றும் விளையாட்டு உபகரணங்களை கடையநல்லூர் நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபிபூர் ரஹ்மான் தலைமையில், சமுக ஆர்வலர்கள், தன்னார்வலர்கள் சீர்வரிசையாக எடுத்து வந்து அங்கன்வாடி மையத்திற்கு வழங்கினர். குழந்தைகளுக்கு வசதியான சுகாதார வசதிகள், மின்விசிறிகள், மின் விளக்குகள் போன்ற வசதிகளையும் செய்து கொடுத்துள்ளனர்.

புதிதாக சீரமைக்கப்பட்ட அக்கட்டிடத்தை நகர்மனற தலைவர் மூப்பன் ஹபிபூர் ரஹ்மான் திறந்து வைத்தார். இடிந்து விழும் நிலையில் இருந்த அங்கன்வாடி மைய கட்டிடத்தை சீரமைத்த கடையநல்லூர் காவல் ஆய்வாளர் ஆடிவேல், தலைமை காவலர் முத்துராஜ், சங்கர், கனிராஜ் மற்றும் நன்கொடையாளர்களையும், பொதுமக்கள், பெற்றோர்கள் பாராட்டி வருகின்றனர்.

# உலக காசநோய் தின விழிப்புணர்வு நிகழ்ச்சி



**புதுக்கோட்டை, மார்ச் 25-**

புதுக்கோட்டை ஆலங்குடி அரசு மருத்துவமனையில் காசநோய் கண்டறியும் முகாம் மற்றும் உலக காசநோய் தின விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. தலைமை மருத்துவர் மு.பெரியசாமி தலைமை ஏற்று நடத்தினார். இதில் மருத்துவர் லிபர்த்தி முன்னிலை வகித்தார். மோகன்ராஜ் வரவேற்றார். செவிலியர்கள் வேலுமணி, செல்வகுமாரி, கலைச்செல்வி, விண்ணரசி, ஜான், சந்தியா ஆகியோர் காசநோய் கண்டறியும் முகாமில் கலந்துகொண்டனர்.

இதில் தனது தலைமை உரையில் டாக்டர் மு. பெரியசாமி, ஆலங்குடி அரசு மருத்துவமனையில் கடந்த 100 நாட்கள் நடைபெற்ற சிறப்பு முகாமில் இருமல், சளி தொந்தரவு உள்ள 573 பேர் காசநோய்க்கான பரிசோதனையில் கலந்துகொண்டனர். இதில் 10 பேருக்கு காசநோய் இருப்பது கண்டறியப்பட்டு, இதற்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு சத்தான உணவுக்காகவும், மருந்துகளை தொடர்ந்து உட்கொள்ள ஊக்கத்தொகையாக மாதம் 1000 ரூபாய் அரசால் வழங்கப்படுகிறது.

இந்திய அரசு 2025ஆம் ஆண்டிற்குள் காசநோய் இல்லாத தேசமாக மாற்ற பல வகையான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன்படி சிறப்பு முகாம்கள் மூலம் கிராமங்களுக்கே சென்று எக்ஸ்ரே, சளி பரிசோதனை, கிராம செவிலியர்கள் மூலம் நேரடியாக மருந்துகளை உட்கொள்ள செய்வதுடன், பல தொண்டு நிறுவனங்கள் பங்களிப்புடன் சத்தான உணவுப்பொருட்கள் வழங்கியும் வருகின்றனர்.

தற்பொழுது ஆய்வுகள் அடிப்படையில் உலகில் காசநோய் உள்ளவர்களில் இந்தியாவில் சுமார் 25% உள்ளனர். ஆனால் இந்த பாதிப்பு மற்றும் இதன் இறப்பு விகிதம் அரசின் திட்டங்களால் மிகவும் குறைந்துள்ளது. தொடர் இருமல், சளி, மாலை நேரங்களில் வரும் காய்ச்சல், உடல் எடை குறைதல் ஆகியவை இதன் ஆரம்ப அறிகுறிகளாகும். இவற்றை ஆரம்பத்திலே கண்டறிந்து சிகிச்சை பெற்றால் முழுவதும் குணமடையலாம். இது சர்க்கரைநோய், உடல் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்களுக்கு எளிதில் பரவும் அபாயம் உள்ளது. இந்நோய் இருமலின்போது காற்றின் மூலம் பரவுவதால் இதை தடுக்க முகமூடி அணிந்துகொள்வது சிறந்ததாகும். காசநோய்க்கான சிகிச்சை முறைகள் அனைத்து மருத்துவமனைகளிலும் வழங்கப்படுவதால் பாதிக்கப்பட்டவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறினார். டாக்டர் உஷாராணி நன்றி கூறினார்.

# புனித பேட்ரிக் மேல்நிலைப் பள்ளி 34ம் ஆண்டு விழா




**புதுச்சேரி, மார்ச் 25-**

புனித பேட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் வழக்கமான உற்சாகத்துடன் 34ம் ஆண்டு விழா பள்ளியின் வெள்ளி விழா கட்டிடம் லில்லி ரெஜிஸ் கலையரங்கத்தில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு புதுவை அரசின் கல்வி செயலர் ஜவகர், பள்ளி முன்னாள் மாணவரும், பொறியாளருமான கிருஷ்ண சந்தர், பள்ளியின் ஆலோசனைக் குழு தலைவரும் புதுவை ரெட்டியார்பாளையம் புனித அந்திரேயா தேவாலய பங்குத்தந்தையுமான ஜோசப் பால் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக பங்கேற்று கடந்த கல்வியாண்டில் கல்வியிலும், விளையாட்டிலும் சிறந்து விளங்கிய மாணவ, மாணவிகளை பாராட்டி சுழற்கேடயமும், முதல் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை உள்ள 47 மாணவர்களுக்கு கல்வி உதவி தொகையையும் வழங்கி வாழ்த்தி பேசினர்.

மேலும், பள்ளிக்கு விடுப்பு எடுக்காமல் தொடர்ந்து வருகை தந்த 5 ஆண்டுகள் முதல் 9 ஆண்டுகள் வரை வருகை தந்த 18 மாணவர்களுக்கு சான்றிதழ்களையும், 9 ஆண்டுகள் தொடர்ந்து பள்ளிக்கு வருகை தந்த மூன்று 12ம் வகுப்பு மாணவர்களான ஷெர்வின் ஜோஸ்வா, ரேஷ்மா, யோகிதா ஆகியோருக்கு கேடயமும் வழங்கி கௌரவித்தனர். மேலும் விளையாட்டு துறையில் சாதனை படைத்த மாணவர்களும் இந்நிகழ்ச்சியில் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த கல்வியாண்டில் சிறந்த மாணவர்களாக தேர்வு செய்யப்பட்டவர்களான ஆரம்பப்பள்ளி பிரிவில் ஐந்தாம் வகுப்பைச் சேர்ந்த பிரிஸ்டினா ஆலிவ், உயர்நிலைப் பள்ளி பிரிவில் பத்தாம் வகுப்பைச் சேர்ந்த பிரியன், மேல்நிலைப்பள்ளி பிரிவில் 12ம் வகுப்பைச் சேர்ந்த விஜய மித்திரன் மற்றும் தனிஷா பிரின்ஸி.

இக்கல்வியாண்டில் கல்வியில் சிறந்து விளங்கிய மாணவர்கள் 12ம் வகுப்பு உயிரியல் பிரிவு மாணவி ஷஞ்ஜீவினி, 12ம் வகுப்பு கணினி பிரிவு மாணவர் சர்வேஸ்வர், 12ம் வகுப்பு வணிகவியல் பிரிவு மாணவன் கைலாஷ், விளையாட்டு பிரிவில் முதலிடம் பெற்ற 12ஆம் வகுப்பு மாணவர்கள் தர்ஷினி, ஸ்ரீஜேஸ்வா, வினாடி வினா போட்டியில் சிறப்பிடம் பெற்ற 12ம் வகுப்பைச் சேர்ந்த அரவிந்த் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

25 ஆண்டுகள் பணி நிறைவு செய்த இரு ஆசிரியைகள் ரெஜினா கார்மேல், தனலட்சுமி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்ச்சிக்கு பள்ளியின் முதல்வர் ஸ்டெல்லா வரவேற்புரை வழங்கினார். பள்ளியின் தாளாளர் ரெஜிஸ் பிரடெரிக் இக்கல்வியாண்டிற்கான ஆண்டு அறிக்கையினை வாசித்தார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளியின் மருத்துவ இயக்குநர் ஜீத்தா பிரடெரிக், பள்ளியின் ஆலோசனைக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியை 12ம் வகுப்பு மாணவர்கள் லோகரஞ்சன், முகிலன், சுருதி, ஸ்ரீஜா ஆகியோர் தொகுத்து வழங்கினர். 12ம் வகுப்பு மாணவன் விஜய மித்திரன் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பள்ளியின் முதல்வர் ஸ்டெல்லா தலைமையில் பள்ளியின் இருபால் ஆசிரியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# குடிதண்ணீர் கேட்டு மக்கள் சாலை மறியல்




**புதுக்கோட்டை, மார்ச் 25-**

புதுக்கோட்டை மாவட்டம் வல்லபுராங்கோட்டை காவல் சரக்கத்திற்கு உட்பட்ட கைக்றிச்சி ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு வரக்கூடிய குடிநீர் குழாய் சாலை அமைக்கும் பணியின் போது சேதமடைந்துள்ளதால் குடிநீர் வரவில்லை என்று கூறி பேருந்து நிறுத்தம் அருகில் சாலை மறியல் செய்தனர் தகவல் அறிந்து வந்த கைகுறிச்சி ஊராட்சி சுரேஷ் இரண்டு தினங்களுக்குள் தண்ணீர் வர ஏற்பாடு செய்யப்படும். மேலும் வட்டார வளர்ச்சி அலுவலர் உடனடியாக வந்து சந்திப்பார் என்று கொடுத்த உத்தரவாதத்தின் பேரில் கலைந்து சென்றனர்.

# மாகியில் பணிபுரியும் ஆயுர்வேதா, சித்தா, ஹோமியோபதி மருத்துவர்களுக்கு உடனடியாக சம்பளம் வழங்க வேண்டும்

**ரமேஷ் பரம்பத் சட்டப்பேரவையில் வலியுறுத்தல்**



**புதுச்சேரி, மார்ச் 25-**

புதுச்சேரி சட்டப்பேரவையில் மாகி பிராந்தியத்தின் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ரமேஷ் பரம்பத் மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் பேசியதாவது, ஆயுஷ்மான் திட்டத்தின் கீழ் வரும் பயனாளிகளுக்கு பொதுவான சிகிச்சை வசதிகள் மாகே அருகில் உள்ள கண்ணூர், கோழிக்கோடு மாவட்டங்களில் இருக்கும் தனியார் மருத்துவமனைகளில் இந்த வசதிகள் கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக பலவித கோரிக்கைகள் எழுந்துள்ளன.

மத்திய அரசின் எம்டொர்னல் செய்யப்பட்ட அனைத்து மருத்துவமனைகளிலும் பயனாளிகளுக்கு சிகிச்சை கிடைக்குமாறு மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த சட்டமன்ற கூட்டத்தில் முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட முதலமைச்சர் காப்பீடு திட்டம் இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை.

மாகேயில் ஆயுர்வேதா, சித்தா, ஓமியோபதி டாக்டர்கள் 2005ல் இருந்து பணியில் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு இதுவரை சம்பளம் வழங்கவில்லை. அவர்களுக்கு உடனடியாக சம்பளம் வழங்கி அவர்களது வாழ்வாதாரத்தை காக்க வேண்டும்.

மாகேயில் பாலிடெக்னிக் காலேஜில் புதுவை மாநிலத்திலேயே அதிகமான மாணவர்கள் படிக்கிறார்கள். ஆனால், போதுமான ஆசிரியர்கள் இல்லை. அங்கு உடனடியாக ஆசிரியர்களை நியமித்து மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்க வேண்டும்.

மாகேயில் கடந்த 12 வருடங்களாக பாண்டிச்சேரி யூனிவர்சிட்டி, சமுதாய கல்லூரிக்கு சொந்தமான கட்டிடம் இல்லை.

இந்நிலையில், தற்போது நல்ல முறையில் இயங்கி வரும் கிழக்கு பள்ளூரில் உள்ள அரசு அவரோஸ் நடுநிலைப்பள்ளியை மூடுவதை தவிர்க்க வேண்டும். இப்பள்ளியின் இடத்தை மாற்றிக் கொடுத்தால் பள்ளி மாணவர்கள் 2 கி.மீ., வரை சென்று படிக்க நேரிடும். எனவே, பள்ளூரில் அரசு காலி இடங்கள் உள்ளது. அந்த இடங்களை கையகப்படுத்தி யூனிவர்சிட்டிக்கு கொடுக்க வேண்டும்.

மாகேயில் 12 ஹைமாஸ் மாஸ் லைட் உள்ளது. ஆனால், அந்த விளக்குகள் வருட கணக்கில் எரியாமல் உள்ளது.

இது பற்றி அதிகாரிகளிடம் கேட்டால், மின்சாரத்துறை, பொதுப்பணித்துறை, முனிசிபாலிட்டி என்று பல்வேறு விதமான பதிலை தெரிவிக்கின்றனர். எனவே, இது சம்பந்தமாக புதுவை அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். புதுவை அரசு சார்பில் இரண்டு சுற்றுலா விடுதிகள் உள்ளது.

புதுவையில் இருந்து வி.ஐ.பி.,க்கள் வந்தால் தங்குவதற்கு இடம் இல்லை. எனவே, மாகி நிர்வாக அலுவலகத்தின் பக்கத்தில் சுற்றுலா துறையின் இடம் உள்ளது. அந்த இடத்தில் சுற்றுலாத்துறை அல்லது பி.பி.ஏ., மாடல் மூலமாகவோ கட்டிடம் கட்டுவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதுவையில் இருந்து மாகே பிராந்தியத்திற்கு அருகில் உள்ள கண்ணூர் ஏர்போர்ட் மூலம் விமான சேவை ஆரம்பிக்க சுற்றுலாத்துறை அமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் சம்பந்தமான பல வழக்குகள் நிலுவையில் உள்ளன. தற்போதைய சட்டத்தின்படி மேலும் மேலும் தவறு செய்கிறார்கள்.

எனவே, கடுமையான சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த 15 வருடங்களாக சமூக நலத் துறையில் அதிகாரிகள் இடம் காலியாக உள்ளது. அந்த இடங்களை உடனடியாக நியமிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# உலக டவுன் சிண்ட்ரோம் தின விழிப்புணர்வு பேரணி




**புதுச்சேரி, மார்ச் 25-**

சாரோன் சொசைட்டி ஆஃப் பாண்டிச்சேரி அமைப்பில் இயங்கும் சாரோன் சிறப்பு பள்ளி, தேசிய அறக்கட்டளை, லாஸ்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையம், விநாயக மருத்துவ கல்லூரி ஒருங்கிணைந்து உலக டவுன் சிண்ட்ரோம் தின விழிப்புணர்வு பேரணியாக கொண்டாடியது.

இதில் சாரோன் சொசைட்டி ஆஃப் பாண்டிச்சேரியின் நிறுவனர் மோகன் செயலாளர் தலைமையில், விநாயக மிஷன் மருத்துவ கல்லூரி முதல்வர் சாரதா ரமேஷ் சிறப்பு விருந்தினராகவும் மற்றும் லாஸ்பேட்டை, கருவடிகுப்பம் காவல் நிலைய ஆய்வாளர்கள் பங்களிதனர்.

ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவ அதிகாரி ரமோனோ, கொடி அசைத்து துவங்கி வைத்தார். ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 21 அன்று கொண்டாடப்படும் உலக டவுன் சிண்ட்ரோம் தினம், உலகளவில் டவுன் சிண்ட்ரோம் உள்ளவர்களின் உரிமைகள், உள்ளடக்கம் மற்றும் நல்வாழ்வுக்காக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் வாதிடுவதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நாளாகும். டவுன் சிண்ட்ரோம் என்பது ஒரு நபர் குரோமோசோம் 21 இன் கூடுதல் நகலுடன் பிறக்கும்போது ஏற்படும் ஒரு மரபணு நிலை. இந்த கூடுதல் மரபணு பொருள் உடல் மற்றும் மூளை வளரும் விதத்தை பாதிக்கிறது. இது சில சிறப்பியல்பு உடல் அம்சங்கள், அறிவுசார் குறைபாடுகள் மற்றும் சில நேரங்களில் மருத்துவ பிரச்சினைகளுக்கு வழி வகுக்கிறது.

டவுன் சிண்ட் ரோம் உள்ள நபர்களுக்கான புரிதல், ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதும், எங்கள் சமூகங்களுக்கு அவர்களின் தனித்துவமான பங்களிப்புகளைக்கொண்டாடுவதும் முக்கியம். இந்த நிகழ்ச்சியில் சாரோன் சொசைட்டி நிறுவனர் மோகன் மற்றும் பொருளாளர் சுகுணா, ரம்யா, நான்சி, சீதா, ரமாதேவி, சரசுவதி, லூர்துமேரி, ராஜகுமார், பூவரசன், சின்னதம்பி, தன்னார்வ தொண்டர் ஷோபனா மோகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● செவ்வாய் ● மார்ச் 25, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

# மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை பெற்ற ஆட்சியர்



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு குறைகளை கேட்டறிந்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜராஜன்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவி




திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகளை மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கினார்கள்.

# மாமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்



திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் தலைமையில் நல்லூர் பகுதியில் உள்ள 3வது மண்டல அலுவலக கூட்டரங்கில் அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

# வணிக வளாகத்தில் ஆணையாளர் ஆய்வு



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் ராமூர்த்தி அணைக்காடு பகுதிகளில் வரி வசூல் பணிகள் மற்றும் குமரன் வணிக வளாகத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# தெருவிளக்கு அமைப்பது குறித்து ஆய்வு கூட்டம்



திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் தலைமையில் மாநகராட்சி ஆணையாளர் ராமமூர்த்தி முன்னிலையில் மாநகராட்சி மைய அலுவலக கூட்டரங்கில் புதிதாக அமைக்கும் தெருவிளக்கு மற்றும் இ.பி பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

# 2 மாற்றுத்திறனாளிகளுக்கு கடனுதவி வழங்கல்



வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி, ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற குறைதீர்வு நாள் கூட்டத்தில் வேலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் வீடு கட்டுவதற்கு 2 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,50,000 வீதம் என ரூ.3,00,000 வங்கி கடனுதவிக்கான காசோலையினை வழங்கினார்.

# அரசின் சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சி



புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், பொன்பேத்தி கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், தமிழ்நாடு முதலமைச்சரின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

# காசநோய் விழிப்புணர்வு கிரிக்கெட் போட்டி

திண்டுக்கல், மார்ச் 25-

திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரியில் நடைபெற்ற உலக காசநோய் தின நிகழ்வு மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், காசநோய் விழிப்புணர்வு கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்ற ஜி கி ழி ஷி கி சி ஷி பணியாளர்கள் அணி, எரியோடு மருத்துவப் பணியாளர்கள் அணி, காசநோய் பணியாளர்கள் அணிக்கு பரிசு கோப்பையை மாவட்ட ஆட்சியர் வழங்கிச் சிறப்பித்தார்.



# பொதுமக்களிடம் கோரிக்கை மனு பெற்ற ஆட்சியர்



திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் தலைமை வகித்து பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுகொண்டார்.

# மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்



**தென்காசி, மார்ச் 25-**

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக்கொண்டார்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் தலா ரூ.8,500 வீதம் 20 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,70,000 மதிப்பிலான காதொலி கருவிகளையும், தாட்கோ அலுவலகம் மூலம் நன்னிலம் மகளிர் நில உடமைத்திட்டத்தின் கீழ் 01 பயனாளிக்கு ரூ.5 இலட்சம் மானியமும், 05 பயனாளிகளுக்கு தூய்மைப்பணியாளர் நல வாரிய அடையாள அட்டையினையும், 05 பயனாளிகளுக்கு தூய்மைப்பணியாளர் நல வாரியம் வழியாக தூய்மை பணிபுரிபவர்களுக்கு ரூ.5 இலட்சம் மருத்துவ செலவினங்களுக்கான மருத்துவ காப்பீடு அட்டைகளையும், இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தென்காசி மாவட்டம் சார்பில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம் கலிங்கப்பட்டி பஞ்சாயத்திற்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

மேலும், இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 735மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் முத்துராமலிங்கம், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஜெயப்பிரகாஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சுப்புலெட்சுமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) செல்வக்குமார், துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) நம்பிராயர் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# திருநள்ளாறு ஸ்ரீ சனீஸ்வரர் கோவிலில் வாக்கிய பஞ்சாங்க முறைப்படி மட்டுமே சனி பெயர்ச்சி நடைபெறும்

## கோவில் நிர்வாக அதிகாரி அறிவிப்பு



**காரைக்கால், மார்ச் 25-**

காரைக்கால் திருநள்ளாறு ஸ்ரீ சனீஸ்வரர் கோவிலில் வாக்கிய பஞ்சாங்க முறைப்படி மட்டுமே சனி பெயர்ச்சி நடைபெறும். அந்த வகையில் வரும் 2026 இல் தான் சனிப்பெயர்ச்சி விழா நடைபெறும். என கோவில் நிர்வாக அதிகாரி அருணகிரிநாதன் அறிவித்துள்ளார்.

காரைக்காலை அடுத்த திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்னேஸ்வரர் கோவிலில் ஸ்ரீ சனி பகவான் தனி சன்னதி கொண்டு அருள் பாலித்து வருகிறார். இக்கோவிலில் சனிக்கிழமை தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்களும், சனிப்பெயர்ச்சியின்போது லட்சக்கணக்கான பக்தர்களும் வருகை தந்து சாமி தரிசனம் செய்வது வழக்கம். மேலும் இக்கோவிலைப் பொறுத்தவரை வாக்கிய பஞ்சாங்க முறைப்படி தான் சனி பெயர்ச்சி விழா நடைபெறுவது வழக்கம், ஆனால் கடந்த சில தினங்களாக, பக்தர்கள் ஜோதிடர்கள், அர்ச்சகர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில், சனி பெயர்ச்சி வழா தொடர்பாக, பல்வேறு தவறான செய்திகள் மற்றும் கட்டுரைகள், நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் வெளியாகி வருகிறது. குறிப்பாக, வருகிற மார்ச் 29 அன்று சனி பெயர்ச்சி நடைபெறும் என்ற தகவல்கள் பரவலாக வெளிவந்த வண்ணம் இருப்பதால் பக்தர்களிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து திருநள்ளாறு தேவஸ்தான, தனி அதிகாரியும் மாவட்ட கலெக்டருமான சோமசேகர் அப்பா ராவ் உத்தரவின் பேரில், நிர்வாக அதிகாரி அருணகிரிநாதன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வரர் சுவாமி தேவஸ்தானம், அருள்மிகு ஸ்ரீசனீஸ்வர பகவான் புண்ணியத் திருத்தலத்தில், வாக்கிய பஞ்சாங்கம்" முறையை பின்பற்றுவதை தெளிவுபடுத்துகிறோம். இந்த பாரம்பரிய கணிப்பு முறையின் படி, 2026ஆம் ஆண்டில் சனிப் பெயர்ச்சி நடைபெறும் என தெரிவிக்கின்றோம்.

ஆகையினால் 29.03.2025 அன்று சனிப்பெயர்ச்சி விழா சிறப்பாக கொண்டாடப்படுவது வழக்கம் இல்லை. அன்றைய தினம் வழக்கமாக நடைபெறும் தினசரி பூஜைகள் மட்டுமே நடைபெறும். திருநள்ளாறு ஸ்ரீ சனீஸ்வர பகவான் திருத்தலத்தில் சனி பெயர்ச்சி சம்பந்தமான நிகழ்வு நடைபெறும் சரியான தேதி மற்றும் நேரம் பின்னர் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும். எனவே, பக்தர்கள், ஜோதிடர்கள், அர்ச்சகர்கள் மற்றும் பொது மக்கள் திருநள்ளாறு கோயிலில் பின்பற்றப்படும் பாரம்பரிய வாக்கிய பஞ்சாங்க வழிபாட்டு மரபை கருத்தில் கொண்டு செயல்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சாலை பாதுகாப்பு குழுக் கூட்டம்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாதாந்திர சட்டம் ஒழுங்கு மற்றும் சாலைப் பாதுகாப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் நடைபெற்றது.

# இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி



வேலூர் மாவட்டத்தில் சமூக நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் "பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" திட்டம் தொடங்கி 10 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு பெண் காவலர்கள் பங்கேற்ற இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி கீரின் சர்க்கிள் அருகில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள்.

# மூன்று சக்கர வாகனம் வழங்கிய லட்சுமிகாந்தன் எம்எல்ஏ



புதுவை மாநிலம் ஏம்பலம் தொகுதியில் நடந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் லட்சுமிகாந்தன் எம்எல்ஏ மாற்றுத்திறனாளி பெண்ணுக்கு மூன்று சக்கர வாகனம் வழங்கினார்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● செவ்வாய் ● மார்ச் 25, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



நாமக்கல், மார்ச் 25–

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, வங்கி கடன் உதவி, குடிசை மாற்று வாரிய வீடு, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வேண்டி பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 590 மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் உமாவிடம் பொதுமக்கள் வழங்கினார்கள். மனுக்களைப் பெற்றுகொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் மனுக்களை பரிசீலினை செய்து உரிய அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறைசார்பில்,8மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.22,960 மதிப்பில் காதொலி கருவிகள், 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.138 மதிப்பில் கண்கண்ணாடி, 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.430 மதிப்பில் மடக்கு குச்சி என மொத்தம் 10 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.23,528 மதிப்பில் உதவி உபகரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் சுமன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) பிரபாகரன், திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் சுகந்தி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கலைச்செல்வி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## அண்ணாமலைப் பல்கலைக்கழக உதவி பேராசிரியருக்கு கற்றல் விருது



சிதம்பரம், மார்ச் 25–

நியூஸ் 18 தமிழ்நாடு தொலைக்காட்சி, கல்வி நிறுவனங்களின் அயராத முயற்சிகளை போற்றும் வகையில், "கற்றல் விருதுகள் 2025" வழங்கும் விழாவை மார்ச் 21, 2025 அன்று மாலை சென்னை ஹயாத் ரீஜென்சி ஹோட்டலில் நடத்தியது.

இந்த விழாவில் தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பல்வேறு கல்வி சாதனையாளர்களுக்கு விருதுகளை வழங்கினார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கணினி மற்றும் தகவல் அறிவியல் துறையின் உதவி பேராசிரியர் முனைவர் கே. ஜெயபிரகாஷ் "சிறந்த பேராசிரியர் விருது" பெறும் பெருமையை அடைந்தார். பல்கலைக்கழகத்தின் ஆதரவுடனும், இந்தியா சியாடில் குழுமத்தின் நிதி உதவியுடனும், தமிழ்நாடு பழங்குடியினர் நலத்துறையின் வழிகாட்டுதலுடனும், பழங்குடியினருக்கான கல்வி பணிகளில் அவர் செய்த சிறப்பான சேவையை அங்கீகரித்து இந்த விருது வழங்கப்பட்டது. விருது பெற்ற முனைவர் கே. ஜெயபிரகாஷ், பல்கலைக்கழக துணைவேந்தர் குழு உறுப்பினர் முனைவர் அருட்செல்வி, பல்கலைக்கழக பதிவாளர் முனைவர்.வி.பிரகாஷ் ஆகியோர் பாராட்டு தெரிவித்து, அவரை வாழ்த்தினர். இந்நிகழ்வில் டாக்டர் எஸ்.அறிவுடைநம்பி, இயக்குனர் ஐக்யூஏசி, டாக்டர் எஸ்.ரமேஷ்குமார், மற்றும் எஸ், கார்த்திக் குமார், துணை இயக்குனர்கள் ஐக்யூஏசி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியோர் பங்கேற்றனர்.

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்

கடலூர், மார்ச் 25–

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபிஆதித்யா செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, பொதுமக்களின் குறைகளை களைவதற்காகவும், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று உரிய விசாரணை மேற்கொண்டு, தகுதியான பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும் மக்கள் குறைதீர்க்கும் நாள்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் திங்கள்கிழமைதோறும் நடைபெற்று வருகிறது.

இன்றைய கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 994 மனுக்கள் பெறப்பட்டன. பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்டதுறை அலுவலர்களிடம் வழங்கி தகுதியான மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.



நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறைசார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.12,000 மதிப்பீட்டில் காலிபர் சாதனங்களையும், தேசிய நுகர்வோர் பாதுகாப்பு தினம், உலக நுகர்வோர் பாதுகாப்பு தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற 12 மாணவ, மாணவியர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகளுக்கு ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவைகளை அவர்களின் இருப்பிடத்திற்கே சென்று வழங்குவதற்கு தலா ரூ.60 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் 2 நடமாடும் விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை ஊர்தியை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார்.இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) வெங்கடேசன், உதவி ஆணையர் (கலால்) சந்திரகுமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) தங்கமணி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி



கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் ஊராட்சி ஒன்றியம், கனுவக்கரை ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சி நடைபெறுவதை ஏராளமான மக்கள் பார்வையிட்டனர்.

# ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு பல்வேறு அரசு நலத்திட்டங்கள் வழங்கப்படுகிறது

## மேனாள் நீதிபதி தமிழ்வாணன் பேச்சு

நெல்லை, மார்ச் 25–

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையத்தலைவர் மேனாள் நீதிபதி நீதியரசர் முனைவர் ச.தமிழ்வாணன் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் சுகுமார், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணைய துணைத்தலைவர் இமயம் அண்ணாமலை, குழு உறுப்பினர்கள் செல்வகுமார், முனைவர் சு.ஆனந்தராஜ், இளஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.




இக்கூட்டத்திற்குப்பின், தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையத்தலைவர் மேனாள் நீதிபதி நீதியரசர் முனைவர் ச.தமிழ்வாணன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூகப்பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மாநில அளவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருடைய சட்டப்பூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களின் முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவும். தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம் அமைக்கப்பட்டு முழுநேர ஆணையமாக செயல்பட்டு வருகிறது.

இன்றையதினம் நடத்தப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் முறையாக சென்று சேர்வது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதிகளில் சாலை வசதிகள், குடிநீர் வசதிகள் போன்ற பல்வேறு அடிப்படையான வசதிகள் சரியான முறையில் உள்ளதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், ஆதிதிராவிடர் மக்களின் கோரிக்கைகள் கேட்டறிந்து மாவட்ட நிர்வாகம் மூலம் அவர்களின் கோரிக்கைகள் சரி செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கிராம முன்னோடித் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு பல்வேறு அரசு நலத்திட்டங்கள் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், பள்ளி, கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நலத்திட்ட உதவிகள் குறித்தும், பொதுமக்கள் வழங்கியுள்ள மனுக்களுக்கு ஒருவார காலத்தில் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, வன்கொடுமை தடுப்புச் சட்ட விதிகளை கையாளுவது குறித்தும், ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட நிலம், வீட்டுமனை தொடர்பாக ஏற்படும் இடர்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் நீண்ட நாட்களாக குடியிருப்புகளுக்கு சிறப்பு வரன்முறை பட்டா வழங்க வேண்டுமென்ற உயரிய நோக்கில் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி, கணக்கெடுக்கும் பணியில் தங்களது பெயர் உள்ளதா என்பது குறித்து கிராம நிர்வாக அலுவலகத்தில் நேரில் சென்று உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையத்தலைவர் மேனாள் நீதிபதி நீதியரசர் முனைவர் ச.தமிழ்வாணன் தெரிவித்தார்.

இன்றையதினம், வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவருடைய வாரிசுதாரருக்கு அரசு பணிநியமன ஆணையினையும், வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டு நபர்களுக்கு ரூ.2,17,500 தீருதவித்தொகையினையும், தீண்டாமை இல்லாத கிராமத்திற்கு ரூ.10 லட்சம் வழங்கும் திட்டத்தின்கீழ் தலா ரூ.10லட்சம்வன்னிக்கோனேந்தல் மற்றும் முதுமொத்தான் மொழி கிராமத்திற்கும், மூன்று பயனாளிகளுக்கு தலா ரூ.6,680 மதிப்பிலான இலவச தையல் இயந்திரங்களும், 10 தூய்மைப்பணியாளர்களுக்கு நலவாரிய அட்டைகளும், 10 தூய்மைப்பணியாளர்களுக்கு மருத்துவ காப்பீட்டு அட்டைகள் என மொத்தம் 28 பயனாளிகளுக்கு ரூ.22.37 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையத்தலைவர் மேனாள் நீதிபதி நீதியரசர் முனைவர் ச.தமிழ்வாணன் வழங்கினார்.

தொடர்ந்து, ஸ்ரீவைகுண்டம் பகுதியை சேர்ந்த மாணவன் தாக்கப்பட்டு, திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அம்மாணவனை தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையத்தலைவர் மேனாள் நீதிபதிநீதியரசர் முனைவர் ச.தமிழ்வாணன் மற்றும் ஆணையக்குழுவினர் நேரில் சந்தித்து, மாணவனின் பெற்றோர்களிடம் ஆறுதல் கூறியதோடு, அந்த மாணவனின் கல்விக்கான உத்தரவினையும், வேலைவாய்ப்பிற்கான உத்தரவினையும் இந்த ஆணையத்தின் மூலம் கிடைக்க வழிவகை செய்யப்படும் என தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன், அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனை முதல்வர் ரேவதிபாலன், கோட்டாட்சியர்கள் கண்ணா கருப்பையா (திருநெல்வேலி), ராஜசெல்வி (சேரன்மகாதேவி (பொ), மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் அன்பழகன் (திருநெல்வேலி), பென்னட்ஆசீர் (தூத்துக்குடி) உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்துகொண்டார்கள்.

# தமிழ்நாடு ஹையர் கூட்ஸ் ஓனர்ஸ் அசோசியேசன் சார்பில் ஆலோசனை கூட்டம்



கோவை, மார்ச் 25-

கோவை கிணத்துக்கடவு பகுதி தனியார் மண்டபத்தில் தமிழ்நாடு ஹையர் கூட்ஸ் ஓனர்ஸ் அசோசியேசன் சார்பில் ஆலோசனை கூட்டம் மற்றும் கொடை வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட தலைவர் தங்கவேல் தலைமையில் நடைபெற்றது. ஆலோசனை கூட்டத்திற்கு நந்தகோபால், செயலாளர் மகாலிங்கம், பொருளாளர் பால்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில தலைவர் பழனிச்சாமி, மாநில பொருளாளர் பால்ராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு ஆலோசனை கூட்டத்தில் சிறப்புரையாற்றினார்கள். மேலும் ஐந்து இலட்சம் மதிப்பிலான டெக்கரேசனுக்கு தேவையான பொருட்களை வழங்கினார்கள்.

இதுகுறித்து நிர்வாகிகள் தெரிவிக்கையில் கிணத்துக்கடவு பகுதியில் தீ விபத்தினால் மகேந்திரன் என்பவரின் டெக்கரேசன் கடை மின்சார கசிவினால் தீ விபத்து ஏற்பட்டு பல இலட்சம் பொருட்கள் எரிந்து வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளார். கொடையுள்ளத்தோடு செயல்பட்டு அவருக்கு நமது சங்கத்தின் சார்பாக ரூ.5 லட்சம் மதிப்பிலான டெக்கரேசன் பொருட்களை வழங்கியுள்ளோம். மேலும் ஆலோசனை கூட்டத்தில் ஜீஎஸ்டி மற்றும் பொருட்கள் ஏற்றி செல்வதில் உள்ள சிக்கல்கள் குறித்து விரிவாக ஆலோசனை மேற்கொண்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து பயனாளி மகேந்திரன் மற்றும் அவரது குடும்பத்தார் கூறுகையில், பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக இந்த பகுதியில் டெக்கரேசன் கடை நடத்தி வந்தேன். சமீபததில் மின்கசிவினால் ஏற்பட்ட தீ விபத்தால் பல இலட்சம் பொருட்கள் எரிந்து நாசமாயின.

இதனால் எனது வாழ்வாதாரமின்றி மிகவும் பாதிப்படைந்திருந்தேன். இதுகுறித்து கிணத்துக்கடவு காவல்நிலையத்தில் புகார் தெரிவித்துள்ளேன். இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக கோவை மேற்கு பகுதி தலைவர் சிவசுப்பிரமணியன், துணை தலைவர் மலர்விழி தங்கவேல், செயலாளர் விஜயன் மற்றும் பொள்ளாச்சி மற்றும் ஆனைமலை, ஆலாந்துறை கிளை நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# குழந்தை திருமணம் செய்யப்படுவதால் குழந்தைகளின் எதிர்கால நல்வாழ்வு, கல்வி தடைபடுகிறது

## ஆட்சியர் பிருந்தாதேவி பேச்சு



சேலம், மார்ச் 25-

"பெண் குழந்தைகளைக் காப்போம்! பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்" திட்டத்தின் கீழ், சேலம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தின் சார்பில் "குழந்தை திருமணம் தடை செய்வோம்" என்னும் விழிப்புணர்வு வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி மாவட்ட ஆட்சியரகத்தில் தொடங்கி வைத்தார். பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: "சேலம் மாவட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுக்கும் வகையில் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஆட்சியரகத்தில் காவல்துறை, சமூக நலத்துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, பெண் குழந்தை பாதுகாப்பு குறித்து பல்வேறு தொடர் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்தவகையில் பெண் குழந்தைகளைக் காப்போம்! பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்" திட்டத்தின் கீழ், காவல்துறை மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தின் சார்பில் "குழந்தை திருமணம் தடை செய்வோம்" என்ற விழிப்புணர்வு குறும்படம் மற்றும் வாசகங்கள் மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வாகனம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

குழந்தைத் திருமணம் அதிகம் நடைபெறும் பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு குழந்தை திருமணத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்தும், அதன் சட்ட நடவடிக்கைகள் குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாவட்ட காவல் துறை சார்பில் "குழந்தை திருமணம் தடை செய்வோம்" என்ற விழிப்புணர்வு குறும்படம் தயார் செய்யப்பட்டு, இவ்விழிப்புணர்வு வாகனம் பொதுமக்கள் அதிகம் கூடும் பேருந்து நிலையங்கள், உழவர் சந்தைகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் திரையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.குழந்தை திருமண சட்டம் 2006ன் படி 18 வயது நிறைவடையாத பெண்ணும், 21 வயது நிறைவடையாத ஆணும் செய்யும் திருமணம் குழந்தை திருமணமாகும். குழந்தை திருமணம் செய்யப்படுவதால் குழந்தைகளின் எதிர்கால நல்வாழ்வு, உடல் நலம், கல்வி ஆகியவை கிடைக்காமல் குழந்தைகளின் முன்னேற்றம் தடைப்பட பெரிதும் வாய்ப்பாக அமைகிறது. குழந்தை திருமணம் நடைபெறுவது கண்டறியப்பட்டால் தொடர்புடையவர்களுக்கு 2 வருடம் சிறை தண்டனையும், ரூ.1 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படும் என்பது குறித்தும், குழந்தை திருமணம் தொடர்பான புகார்களை 1098 என்ற கட்டணமில்லா தொலைபேசி உதவி எண்ணிலும், 181 என்ற பெண்களுக்கான கட்டணமில்லா உதவி எண்ணிலும் தெரிவிக்கலாம் என்பது குறித்தும் இவ்விழிப்புணர்வு வாகனத்தின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.இந்நிகழ்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) பொன்மணி, மாவட்ட குழந்தைகள் நலக்குழு கூடுதல் துணை காவல் கண்காணிப்பாளர் அண்ணாதுரை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ஸ்ரீ முரளி, குழந்தைகள் நலக்குழு தலைவர் ஜெயந்தி, மாவட்ட சமூக நல அலுவலர் கார்த்திகா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் சுகந்தி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# பள்ளி மாணவியர்களுடன் ஆட்சியர் கலந்துரையாடல்



கன்னியாகுமரி, மார்ச் 25-

கன்னியாகுமரி மாவட்டம் இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இராஜாக்கமங்கலம் அரசு ஆரம்ப சுகாதாரநிலையம் மற்றும் இராஜாக்கமங்கலம் அரசு தொடக்கப்பள்ளியை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சரால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின்கீழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் காலை உணவை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதோடு, மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின்தரம், மற்றும் மாணவர்கள் விருப்பத்துடன் உணவை உட்கொள்கிறார்களா உள்ளிட்டவைகள் குறித்து ஆசிரியர்களிடம் கேட்டறியப்பட்டது. மேலும் காலை உணவு தயாரிக்கும் சமையல்கூடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதோடு, ரேசன் பொருட்களான அரிசி, பருப்பு, பாமாயில், ரவை உள்ளிட்ட பொருட்களின் இருப்பு மற்றும் தரம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சமையலறையினை தூய்மையாக பேணிட பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து இராஜாக்கமங்கலம் அரசு ஆரம் பசுகாதார நிலையத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதோடு, மருத்துவமனையில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட தெரிவித்தார்கள்.

# பொதுமக்கள், விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் பன்றிகளை திரியவிட்டால் கொம்யூன் பஞ்சாயத்து மூலம் பிடிக்கப்படும்

## கலெக்டர் சோமசேகர் அப்பாராவ் அறிவுறுத்தல்



காரைக்கால், மார்ச் 25-

காரைக்காலில் பொதுமக்கள், விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் பன்றிகளை திரிய விட்டால் உடனடியாக நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து மூலம் வெளிமாவட்ட நபர்கள் கொண்டு பிடிக்கப்படும். என மாவட்ட கலெக்டர் சோமசேகர் அப்பாராவ் அறிவுறுத்தியுள்ளார்.

காரைக்கால் மாவட்டத்தில் பல்வேறு சாலைகள் மற்றும் விவசாய நிலங்களில் பன்றிகளின் தொல்லை அதிகரித்து வருவதால், அவற்றை பிடித்து அப்புறப்படுத்த வேண்டும் என அண்மையில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கலெக்டரிடம் முறையிட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து, காரைக்கால் மாவட்ட கலெக்டர் சோம சேகர் அப்பாராவ் தலைமையில், காரைக்காலில் பன்றிகள் வளர்ப்போருடன் நேற்று ஆலோசனை கூட்டம், மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட உள்ளாட்சித் துறை துணை இயக்குனர் சுபாஷ், நகராட்சி ஆணையர் சத்யா, கால்நடைத்துறை இணை இயக்குனர், டாக்டர்.கோபிநாத், திருநள்ளாறு கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் அருணாச்சலம், இன்ஸ்பெக்டர் மரிய கிறிஸ்டியன் பால் மற்றும் பன்றி வளர்ப்பவர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் சோம சேகர் அப்பாராவ் பேசியதாவது: காரைக்காலில் உள்ள விவசாய நிலங்களில் பன்றிகளின் இனப்பெருக்கம் அதிகரித்து வருவதால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாக தொடர்ந்து விவசாயிகள் தங்களது கருத்துக்களை தெரிவித்து வருகின்றன. காரைக்கால் உள்ள அனைத்து கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர்கள் வரும் மார்ச் 31 ஆம் தேதி முதல் காரைக்காலில் விவசாய நிலங்களை பாதிக்கும் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறாக திரியும் அனைத்து பன்றிகளையும் பிடிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பன்றிகளை பிடிப்பதற்கு வெளி மாவட்ட ஆட்களை பணியமர்த்தி பாதுகாப்பான முறையில் தக்கமுன்னேற்பாடுகளுடன் பன்றிகளை பிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு வரையரை செய்யப்பட்ட பகுதியில் மட்டுமே பன்றிகளை வளர்க்க வேண்டும்.பொது இடங்களில் பன்றிகள் வளர்க்கப்பட்டு பொதுமக்கள், விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டால் உடனடியாக நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து மூலம் வெளிமாவட்ட நபர்கள் கொண்டு பிடிக்கப்படும்.

பன்றிகளை அவ்வாறு பிடிக்கும் போது பன்றி வளர்ப்பவர்களால் இடையூறுகள் ஏற்பட்டால், காவல்துறை மூலம் சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படும். ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் பன்றி வளர்ப்பவர்களுக்கு கால்நடை துறை மூலம் ஆலோசனைகள் வழங்கப்பட்டு, மாவட்ட நிர்வாகம் மூலம் உதவிகள் செய்து தரப்படும். குறிப்பிட்ட பகுதிகளில் பன்றி வளர்ப்பவர்கள் இடம் இருந்து பன்றிகளின் கணக்கீடு செய்யப்பட்டு கால்நடைத்துறை மூலம் தொடர்ந்து ஆய்வு செய்ய வேண்டும். என அரசுத்துறை அதிகாரிகளுக்கும் பன்றி வளர்ப்போருக்கும் கலெக்டர் சோமசேகர் அப்பாரவ் அறிவுறுத்தினார்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்




நெல்லை, மார்ச் 25-

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சுகுமார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பொதுமக்களின் கோரிக்கையின் தன்மைக்கேற்ப மனுக்கள் பதிவு செய்யப்பட்டதோடு, அம்மனுக்களை சம்மந்தப்பட்டதுறை அலுவலர்களிடம் அளிக்கும் வகையிலும், முக்கிய கோரிக்கைகள் மற்றும் பொதுபிரச்சனைகள் தொடர்பான மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவரிடம் அளிப்பதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளது.

இம்மனுக்களை சம்மந்தப்பட்டதுறை அலுவலர்களிடம் ஒப்படைத்து மனுக்களை பரிசீலனை செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவிட்டார்கள்.மேலும் முதலமைச்சரின் தனிப்பிரிவுகள் மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். மேலும், மனுக்கள் அளிக்க வந்த மாற்றுத்திறனாளிகளின் இருப்பிடத்திற்கு சென்று அவர்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக்கொண்டார்கள்.

தொடர்ந்து, பாளையங்கோட்டை வட்டம், முன்னீர்பள்ளம் கிராமத்தை சேர்ந்த கருப்பசாமிதேவர் என்பவர் நீரில் மூழ்கி இறந்தமைக்காக அவரது மனைவி கிருஷ்ணம்மாள் என்பவருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1 இலட்சத்திற்கான காசோலையினையும், மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் தலா ரூ.1.01 இலட்சம் மதிப்பிலான இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் 9 பயனாளிகளுக்கும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின் நலத்துறை சார்பில் தலா ரூ.3 லட்சம் வீதம் 3 தொழிற் குழுக்களுக்கு நவீன ஆயத்த ஆடையக உற்பத்தி அலகுக்கான நிதி ஆணைகள் என மொத்தம் 13 பயனாளிகளுக்கு ரூ.19.09 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன், சமூகபாதுகாப்பு திட்டதனித் துணை ஆட்சியர் ஜெயா மற்றும் அனைத்து துறை சார்ந்த அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# உலக காசநோய் தின விழா








**சேலம், மார்ச் 25-**

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் உலக காசநோய் தின விழா மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் பிருந்தா தேவி தலைமையில் நடைபெற்றது. இதில் ஆண்டுதோறும் மார்ச் 24ஆம் தேதி உலக காச நோய் தினமாக கடைபிடிக்கப் பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உலக காசநோய் தின விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் காசநோய் ஒழிப்பில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்கள், கொடையாளர்கள் மற்றும் சேலம் மாவட்டத்தில் காசநோய் இல்லாத 72 கிராம ஊராட்சிகளுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. இதில் ஒருவராக காசநோய் ஒழிப்பு கொடையாளர் முனைவர் ரொட்டேரியன் மேட்டூர் பாலகிருஷ்ணனுக்கு மாவட்ட ஆட்சி தலைவர் டாக்டர் பிருந்தா தேவி சான்றிதழ் வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்வில் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் தேவிமீனால், ஆத்தூர் மாவட்ட சுகாதார அலுவலர் யோகானந்த், மருத்துவமனை கண்காணிப்பாளர் ராஜ்குமார், துணை இயக்குனர்கள் கணபதி, ராதிகா, சுகன்யா உட்பட செவிலியர், கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

# காசநோய் ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழி





தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி அரசு செவிலியர் பயிற்சி பள்ளியில் உலக காசநோய் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற காசநோய் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் காசநோய் ஒழிப்பு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் அனைவரும் எடுத்துக்கொண்டனர்.

# சேலம் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியில் உலக கண் ஒளியியல் தினம் கடைப்பிடிப்பு

**சேலம், மார்ச் 25-**

உலக கண் ஒளியியல் தினமானது ஆண்டுதோறும் மார்ச் மாதம் கண்பார்வை பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து அனைவருக்கும் எடுத்துரைக்கும் நோக்கிலும் கண் ஒளியியல் பிரிவின் பங்களிப்பினை பறை சாற்றும் வகையிலும் கொண்டாடப் பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு விநாயகா மிஷன் விம்ஸ் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் சார்பில் கண்ணொளியியல் பிரிவின் சார்பில் இத் தினமானது பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் கணேசன் வழிகாட்டு தலின்படி கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்பட்டது.



முன்னதாக கல்லூரியின் கண் ஒளியியல் பிரிவின் பொறுப்பாளர் பேராசிரியை தமிழ் சுடர் வரவேற்புரை வழங்கினார். கல்லூரியின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் நிகழ்விற்கு தலைமையேற்று இத்தினம் கொண்டாடப்படுவதின் சிறப்பு குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வினை முன்னிட்டு மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு மாதிரி வடிவ கண்காட்சி போட்டியும் நடத்தப்பட்டது. இதில் கல்லூரியின் பல்வேறு பிரிவு மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்று தங்களின் படைப்புகளை சமர்ப்பித்தனர். இதில் சிறந்த மாதிரி வடிவ படைப்புகளுக்கு பரிசு வழங்கப்பட்டது.

மேலும் இத்தினத்தை முன்னிட்டு கண் ஒளியியல் பிரிவு மாணவர்கள் தங்களின் துறையினை அடையாளப்படுத்தும் விதமாக வில் வடிவ வளைவினை கல்லூரியில் வடிவமைத்திருந்தனர் இதனை துறையின் டீன் திறந்து வைத்தார்.

இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் கண் ஒளியியல் பிரிவின் பொறுப்பாளர் பேராசிரியை தமிழ் சுடர் மற்றும் உதவி பேராசிரியர்கள் ராம்பிரசாத், மெய்பிரபு, விக்னேஷ்வர், ஜெகதீஸ்வரி மற்றும் சூர்யா, லாவண்யா ஆகியோர் செய்திருந்தனர்.

# பயணியர் நிழற்கூடம் திறப்பு



**தென்காசி, மார்ச் 25-**

தென்காசி ஊராட்சி ஒன்றியம் குத்துக்கல் வலசை ஊராட்சியில் 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பயணியர் நிழற்கூடத்தை ஊராட்சி மன்ற தலைவர் சத்யராஜ் பயணிகளின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

நிகழ்ச்சிக்கு துணைத் தலைவர் சண்முகசுந்தரம் முன்னிலை வகித்தார். கவுன்சிலர்கள் அம்புலி, கண்ணன், இசக்கி தேவி, கலைச்செல்வி, சங்கரம்மாள், மைதீன் பாத்து, சந்திரா, சரவணன், மல்லிகா, கருப்பசாமி, சுப்பையா உட்பட பலர் பங்கேற்றனர்.

# பாராளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு விவகாரம் பிரதமர் மோடியை சந்திக்க நேரம் ஒதுக்குமாறு கடிதம்

**சென்னை, மார்ச் 25-**

பாராளுமன்றத் தொகுதிகளை மறுசீரமைக்க 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தொகுதிகள் நிர்ணயம் செய்யப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

அவ்வாறு தொகுதி மறுசீரமைப்பு செய்தால் தமிழ்நாட்டில் எம்.பி.க்களின் பிரதிநிதித்துவம் 39ல் இருந்து 31 ஆக குறைந்து விடும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறிவருகிறார். தென் மாநிலங்களில் இதே போல் ஒவ்வொரு மாநிலத்திலும் எம்.பி.க்களின் எண்ணிக்கை குறைந்துவிடும் அபாயம் உள்ளதாகவும் எனவே,




25 ஆண்டுகளுக்கு தொகுதி மறுசீரமைப்பு செய்வதை தள்ளி வைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறார்.

கடந்த சனிக்கிழமை (22ந்தேதி) நடைபெற்ற கூட்டு நடவடிக்கை குழுக் கூட்டத்தில் இதுகுறித்து தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. அதுமட்டுமின்றி தற்போது நடைபெற்று வரும் பாராளுமன்றக் கூட்டத்தொடரில் இதுகுறித்து கூட்டு நடவடிக்கை குழுவின் சார்பில் பிரதமரை சந்தித்து கடிதம் அளித்து முறையிடுவது என்றும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து சட்டசபையில் நேற்று பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொகுதி மறுசீரமைப்பின்போது பாதிக்கப்படும் மாநிலங்களின் உரிமைகளை மீட்டெடுத்திட நியாயமான தொகுதி மறு சீரமைப்பை பெற்றிட தமிழ்நாட்டில் இருந்து பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் உள்ள கட்சிகளின் எம்.பி.க்களை எல்லாம் அழைத்துச் சென்று பிரதமரை சந்திக்க இருக்கிறோம் என்று கூறினார். இதைத்தொடர்ந்து பிரதமரை சந்திக்க நேரம் ஒதுக்குமாறு தமிழக அரசு சார்பில் இன்று கடிதம் அனுப்பப்படுகிறது.

பிரதமர் மோடி அடுத்த மாதம் (ஏப்ரல்) முதல் வாரம் வெளிநாடு செல்ல இருப்பதால் அதற்கு முன்னதாகவே இவர்களை சந்திப்பதற்கு அனுமதி கொடுப்பார்களா? என்பது குறித்து இன்று அல்லது நாளை தெரிந்து விடும்.

# ஆத்திகுளம் பஸ் ஸ்டாப் அருகே பொதுமக்கள் சாலை மறியல்



**கயத்தாறு, மார்ச் 25-**

கயத்தாறு யூனியனைச் சேர்ந்த தெற்கு இலந்தைகுளம் பஞ்சாயத்து ஆத்தி குளம் கிராமத்தில் ஏற்கனவே 36 ஆண்டுகளாக இயங்கி வந்த அரசு ரேசன் கடை தற்போது பழுதாகி உள்ளது. புதிய ரேசன் கடை கட்ட இடம் அதிகாரிகள் ஊருக்கு ஒதுக்கு புறத்தில் தேர்வு செய்தாக தகவல் கேட்ட கிராம மக்கள் கயத்தாறு தேவர் குளம் சாலையில் ஆத்திகுளம் பஸ் ஸ்டாப் அருகில் புதிய ரேஷன் கடை பழைய இடத்திலேயே கட்ட கோரி சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதனை கண்ட தாசில்தார் சுந்தரராகவன் மற்றும் கயத்தாறு யூனியன் வட்டார வளர்ச்சி அலுவலர் பாண்டியராஜன் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சிவராமகிருஷ்ணன், காவல்துறை சப் இன்ஸ்பெக்டர் தமிழ்ச்செல்வன் காசிலிங்கம் மற்றும் போலீசார் அவருடன் பேச்சு வார்த்தை நடத்தி விரைவில் தீர்வு காணப்படும் என கூறிய பின்னர் பொதுமக்கள் அனைவரும் கலைந்து சென்றனர்.

# டெல்லியில் முகாமிடும் எடப்பாடி பழனிசாமி, எஸ்.பி.வேலுமணி



**சென்னை, மார்ச் 25-**

பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று டெல்லிக்கு பயணம் மேற்கொள்ள உள்ளார்.

சென்னையில் இருந்து விமானம் மூலம் எடப்பாடி பழனிசாமி, எஸ்.பி.வேலுமணி ஆகியோர் டெல்லிக்கு புறப்பட்டு சென்றனர்.

எடப்பாடி பழனிசாமியின் டெல்லி பயணம் குறித்து அ.தி.மு.க. நிர்வாகிகள் கூறுகையில், டெல்லியில் புதிதாக கட்டப்பட்டுள்ள அ.தி.மு.க. அலுவலகத்தை காண செல்ல உள்ளதாக கூறினர்.

இருப்பினும், சட்டசபை தேர்தல் நெருங்கும் நிலையில் எடப்பாடி பழனிசாமியின் திடீர் பயணம் கூட்டணி குறித்தாக இருக்கலாம் என அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

# டாஸ்மாக் முறைகேடு வழக்கு விசாரணையில் இருந்து நீதிபதிகள் விலகல்

**சென்னை, மார்ச் 25-**

சென்னையில் உள்ள டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் கடந்த 6ந் தேதி முதல் 8ந் தேதி வரை அமலாக்கத்துறை அதிகாரிகள் தொடர் சோதனை நடத்தினர்.



சோதனை முடிவில் பார் உரிமம் வழங்கியது, மதுபானங்கள் கொள்முதல் செய்தது உள்ளிட்டவற்றில் 1,000 கோடி ரூபாய் முறைகேடு நடந்துள்ளதாக அறிக்கை வெளியிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து அமலாக்கத்துறை மீது நடவடிக்கை எடுக்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் டாஸ்மாக் நிர்வாகம் சார்பில் மூன்று மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அந்த மனுக்களில், மாநில அரசின் அனுமதி இல்லாமல் டாஸ்மாக் விவகாரம் தொடர்பாக சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தில் நடவடிக்கை எடுக்க அமலாக்கத்துறைக்கு தடை விதிக்க வேண்டும். விசாரணை என்ற பெயரில் டாஸ்மாக் நிறுவனத்தின் அதிகாரிகளையோ அல்லது ஊழியர்களையோ துன்புறுத்துவதற்கு தடை விதிக்க வேண்டும். கடந்த 6ந்தேதி முதல் 8ந்தேதி வரை நடைபெற்ற அமலாக்கத்துறை சோதனை மற்றும், அப்போது ஆவணங்களை பறிமுதல் செய்ததையும் சட்டவிரோதம் என அறிவிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிபதி எம்.எஸ். ரமேஷ் மற்றும் நீதிபதி என். செந்தில்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்து வந்தது.

கடந்த 20ந்தேதி நடந்த விசாரணையின்போது, இந்த வழக்கிற்கு அமலாக்கத்துறை விரிவான பதில் மனுவை தாக்கல் செய்ய வேண்டும்.

அதில், என்ன குற்றச்சாட்டு? அதற்கான முகாந்திரம் உள்ளிட்ட விவரங்கள் இடம் பெற வேண்டும் என்று தெரிவித்து வழக்கை 25ந்தேதிக்கு (இன்று) தள்ளி வைத்தனர்.

அதுவரை டாஸ்மாக் அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கைகளையும் அமலாக்கத்துறை எடுக்கக்கூடாது என்று தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டு இருந்தனர். இந்த நிலையில், அமலாக்கத்துறை நடவடிக்கைக்கு எதிராக டாஸ்மாக் நிர்வாகம் தொடர்ந்த வழக்கின் விசாரணையில் இருந்து விலகுவதாக நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், என்.செந்தில் குமார் அமர்வு அறிவித்துள்ளது.

எனவே இந்த வழக்கு இனி வேறொரு அமர்வில் விசாரணைக்கு பட்டியலிடப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த முறை விசாரித்து ஆவணங்களை தாக்கல் செய்ய அமலாக்கத்துறைக்கு உத்தரவிட்டிருந்த நிலையில் நீதிபதிகள் விலகல் முடிவை எடுத்துள்ளனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007